# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 12,129 — 1960 මැයි 12 වැනි බ්‍රහස්පතින්ද — 12.5.1960

12,129 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு மே மாதம் 12 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)—பொது

### விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை இல. எம். எல். 28 — அரிசியும் நெல்லும்

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட்ட 4 ம் பிரிவின்கீழ் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு மாத்தளை பரிபாலன மாவட்ட உதவிக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு) பந்துல சோமசிரி தி சில்வா ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1959 ம் ஆண்டு ஜூலை மாதம் 15 ந் திகதி, 11,808 ம் இலக்கத்தைக்கொண்ட அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1959 ம் ஆண்டு ஜூலை மாதம் 10 ந் திகதியைக்கொண்ட எம். எல். 27 ம் இலக்க எனது உணவு விலைக் கட்டளையை 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 11 ந் திகதியிலிருந்து ரத்துச் செய்கிறேன் ;

(2) இதனோடிணைக்கப்பட்டிருக்கும் முதலாம் அட்டவணையின் 2 ம், 3 ம் பத்திகளில் விபரிக்கப்பட்ட விலைகளையை 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 11 ந் திகதி தொடக்கம் மொத்த அந்தரொன்றுக்கு ஆகக்கூடிய மொத்த விலைகளாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். அதே அட்டவணையின் முதலாம் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் இவ்விலைகளுக்கு மேலதிகமாக நெல்லும் அரிசியும் விற்கப்படலொண்ணாது ;

(3) இதனோடிணைக்கப்பட்டிருக்கும் இரண்டாம் அட்டவணையின் 2 ம், 3 ம் பத்திகளில் விபரிக்கப்பட்ட விலைகளையே 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 11 ந் திகதி தொடக்கம் இருத்தலொன்றுக்கு ஆகக்கூடிய சில்லறை விலைகளாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். அதே அட்டவணையில் முதலாம் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் இவ்விலைகளுக்கு மேலதிகமாக நெல்லும் அரிசியும் விற்கப்படலொண்ணாது ;

(4) இக்கட்டளையின் நோக்கங்களுக்காக—

(அ) திரும்பவும் விற்பனை செய்யவென்று விற்கப்படும் எந்தளவு பங்கீட்டரிசி அல்லது பங்கீட்டு நெல் விற்பனவும் வியாபார விற்பனையாகவே கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன் ;

(ஆ) பாவிப்புக்காக அல்லது உபயோகத்துக்காக விற்கப்படும் எந்த அளவு பங்கீட்டரிசி அல்லது பங்கீட்டு நெல் விற்பனவும் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன் ;

(5) பங்கீட்டரிசியையும் நெல்லையும் வேறெப்பொருளுடனுவது கலந்து எவரும் விற்கலாகாதென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(6) பங்கீட்டரிசியை, நெல்லை, விற்குமிடத்து ஆகக்கூடிய விலைக்கு விற்கப்படும் பொருளைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், எந்தப் பங்கீட்டரிசியையோ பங்கீட்டு நெல்லையோ தம் வசத்தில் அல்லது தம் கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் எந்த வியாபாரியும் இக்கட்டளையால் விதிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகள் விபரித்துக் காட்டும் விளம்பரங்களை அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் பகிரங்க பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(8) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், எந்தப் பங்கீட்டரிசியையோ, பங்கீட்டு நெல்லையோ மொத்தமாக விற்கும் எவரும், குறித்த பொருளைச் சில்லறையாக விற்கும் எவரும், அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;
(ஆ) விற்ற பங்கீட்டரிசியின், நெல்லின் தொகை ;
(இ) விற்ற பங்கீட்டரிசிக்கு நெல்லுக்குக் கட்டப்பட்ட விலை ;
(ஈ) எவ்விதமான விற்பனை (மொத்தமாகவோ அல்லது சில்லறையாகவோ).

மாத்தளைக் கச்சேரியில் 1960 ம் ஆண்டு மே மாதம் 4 ந் திகதி 3.40 மணிக்குக் கையொப்பமிடப்பட்டது.

பந்துல சோமசிரி தி சில்வா,
உதவிக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), மாத்தளை மாவட்டம்.

முதலாம் அட்டவணை

| பத்தி 1<br>எல்லை | பத்தி 2<br>அரிசி—நிகர அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த வியாபார விலை<br>ரூ. ச. | பத்தி 3<br>நெல்—நிகர அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த வியாபார விலை<br>ரூ. ச. |
|---|---|---|
| கிராம விதானையின் பகுதி | | |
| 1. சிங்கள பட்டின தலைமைக்காரன் பகுதி, முஸ்லிம் பட்டின தலைமைக்காரன் பகுதி, ஹுலங்கமுவ, ஹரஸ்கமுவ, நாகொல்ல படிவிற்ற .. .. .. | 14 12 | 6 37 |

| பத்தி 1<br>எல்லை<br>கிராம விதானையின் பகுதி | | பத்தி 2<br>அரிசி—நிகர அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த வியாபார விலை<br>ரூ. ச. | பத்தி 3<br>நெல்—நிகர அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த வியாபார விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| 2. | அனுவிஹார, பொவத்த, நுகபிட்டிய, வெரகம, டொரகும்புற, வாரியபொல, உக்குவல, உடகம, பல்லேகம (எம். பி. பி.) கடுவல, கலால்பிட்டிய, இம்புலந்தண்ட, உல்பொத்தபிட்டிய, மன்பொல, மருகோன ஓவில்ல, ஓவல, ரத்தோட்ட, நிக்கவெல, தென்ன, ரிபொற்றுவான, புரிஜ்ஜல வரகும்புற | 14 30 | 6 55 |
| 3. | வரபிட்டிய—பண்டாரபொல, டீவில்ல, போதிக்கொட்டுவ, உடங்கமுவ, முலந்தெனிய, குருபெபில, குருவாவெல, றயிற்றலாவ, நாரங்கொல்ல, கல்வடுகும்புற, மடவல், மஹாவல, பல்லேபொல, பல்தெனிய, புசெல்ல, கவுடுபலல்ல, பமுனுவ, யற்றவத்த, ராஜமன, நாரங்கமுவ, புவாக்பிட்டிய (ஜி. பி.) டொம்பாவல, செலகம, கம்முல, அனுத்கம, எம்பிற்றியாவ, மாத்தலபிட்டிய, எட்டிபொல, உடகம | 14 47 | 6 72 |
| 4. | கிரிமெட்டியாவ | 14 56 | 6 81 |
| 5. | பொரொகாகம—அனுத்கம, அம்பன்பொல, நாலந்த, அம்பொக்க, இம்புலபிட்டிய, கலகம, வட்டஸ்யாய, எஹெலபொல, மில்லவான, டொம்பாவ, நாவரகொட, நெனுலகந்த, நிக்ககொல்ல, பிபிலி, லெனல்ல, பலாபத்வல, (எம். என்.) பல்லெஹபுவித, உடஸ்கிரிய, ரத்வத்த—வெஹிகல, வஹகொட்ட, கும்பலொலுவ, வல்மொருவ, இரியொருவ, அதரம்பொட, கந்தவத்த, கொஸ்வத்த, சுடுஹகும்புற, எலமல்பொத்த | 14 67 | 6 92 |
| 6. | டுல்வெவ, லெனடொர, வெஹிகல, இனகண்ட, அண்டவல | 14 84 | 7 9 |
| 7. | கலெவெல, பிலிஹுடுகொல்ல, கரவிலஹேன, மைல்பிட்டிய, நபடகஹவத்த, பம்பரகஸ்வெவ, அனுத்வெவ, பெலியகந்த, எம்புலம்பே, நயகும்புர, கனுந்தாவ, திற்றவெல்கொல்ல | 14 80 | 7 5 |
| 8. | பதெனிய | 14 92 | 7 17 |
| 9. | பெலிகமுவ, தண்டுபெண்டிருப்பு, வலஸ்வெல, தலகிரியாகம | 14 98 | 7 25 |
| 10. | நாகுலமட, ஒபல்கல்ல, கொங்கஹவல, ஒவிலிகந்த | 15 2 | 7 27 |
| 11. | மௌசகல்ல | 15 9 | 7 34 |
| 12. | இனமலுவ, பல்லகம (டபிள்யு. பி. பி.) எராவுல | 15 12 | 7 37 |
| 13. | எலஹெர, வெலம்பகஹவத்த, எலகமுவ, மாரகமுவ | 15 19 | 7 44 |
| 14. | அண்டங்காவ, கந்தலம, பலுற்றுவ, கும்புக்கண்டன்வல, நிக்கவட்டவான, சிகிரியா | 15 30 | 7 55 |
| 15. | கம்பராவ, பொட்டொற்றவல, புவாக்பிட்டிய (ஜி. யு. பி.) கண்டபிட்டவல, கொட்டபிட்டிய, கொந்துருவாவ | 15 37 | 7 62 |
| 16. | கொடிகஸ்வலன | 15 47 | 7 72 |
| 17. | பல்லெகம (எல். பி. பி.) | 15 97 | 8 22 |
| 18. | எற்றன்வல, கஹகல, மஹலகொட்டுவ, பிற்றவல, இமடுவ, நாரங்கமுவ (எல். பி. பி.), ரம்புக்கொலுவ, ஹல்மினிய, இயுலவாடிய, வில்கமுவ, கல்கொடவல, அக்ரஹாடிய | 16 32 | 8 57 |

## இரண்டாம் அட்டவணை

| பத்தி 1<br>எல்லை<br>கிராம விதானையின் பகுதி | | பத்தி 2<br>அரிசி—நிகர இருத்தல் ஒன்றின் சில்லறை வியாபார விலை<br>ரூ. ச. | பத்தி 3<br>நெல்—நிகர இருத்தல் ஒன்றின் சில்லறை வியாபார விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| 1. | சிங்கள பட்டினத் தலைமைக்காரன் பகுதி, முஸ்லிம் பட்டினத் தலைமைக்காரன் பகுதி, பொவத்த, நுகபிட்டிய, ஹுலங்கமுவ, ஹரஸ்கமுவ, உல்பொத்தபிட்டிய, அனுவிஹார, வெரகம, இம்புலன்தண்ட, வாரியபொல, உக்குவல, உடகம, பல்லெகம (எம். பி. பி.), நாகொல்லபடிவிற்ற, கடுவல, கலால்பிட்டிய, மனபொட, மடுக்கொன, ஓவில்ல, ஓவல, ரத்தொட்ட, நிக்கவல்ல, தென்ன—ரிபொட்டுவாவ, புரிஜ்ஜல, வரகுமுர | 0 13½ | 0 6¾ |
| 2. | ராசமன, நாரங்கமுவ (ஜி. பி.) டீவில்ல, மகவல, உடங்கமுவ, டொரகும்புற, டொம்பாவல, முவாந்தெனிய, கவுடுவலல்ல, அனுத்கம, குரலாவல, றயிற்றலாவ, நாரங்கொல்ல, கல்வடுகும்புர, மடவல, குருபெபில, பல்லெபொல, பல்தெனிய, புசெல்ல, பமுனுவ, யற்றவத்த, கிரிமெட்டியாவ, வரபிட்டிய—பண்டாரபொல, புவாக்பிட்டிய (ஜி. பி.) | 0 14 | 0 7 |
| 3. | உடகம, பொரொகாகம, அனுத்கம, செலகம, கம்முல, எம்பிட்டியாவ, அம்பன்பொல, கலவல, மாத்தலபிட்டிய, எற்றிபொல, நாலந்த, இம்புல்பிட்டிய, கலகம, வட்டஸ்யாய, பிலிகுடு கொல்ல, கரவிலகேன, எகெலபொல, மில்லவான, மைல்பிட்டிய, வல்பொருவ, டொம்பாவ, கிரிஒருவ, நாவரகொட, அகுராம்பொட கந்தவத்த, நெனுவகந்த, நிக்ககொல்ல, சுதுககுருகம, பிபிலி, லெனவல, பலாபத்வல, அம்பொக்க, பல்லெகபுவித, எலமல்பொத, உடஸ்கிரிய, ரத்வத்த—வெகிகல, வககொட்ட, டுல்வெவ, லெனடொர, வெகிகல, நாயகும்புற, கொஸ்வத்த | 0 14½ | 0 7¼ |
| 4. | கெடிகஸ்வலன, பதனிய, பெலிகமுவ, போதிக்கொட்டுவ, அந்தவல, டண்டுபெண்டிருப்பு, வலஸ்வெவ, கும்பலோலுவ, தலபிரியகம, ஒபல்கல்ல, கொங்ககவல, ஒவிலிகந்த, மகுலமட, இனமலுவ, பல்லெகம (டபிள்யு. பி. பி.) நபடகஹவத்த, ஏலகெர, வெலம்பககவத்த, கொண்டுருவாவ, கொட்டபிட்டிய, மாரகமுவ, ஏலகமுவ, கல்பொட, பம்பரகஸ்வெவ, அனுத்வெவ, பெலியகந்த, எம்புலம்பெ, திற்றவல்கொல்ல, கனுண்டாவ | 0 15 | 0 7½ |
| 5. | அவுடன்காவ, கந்தலம, பலுற்றுவ, கும்புக்கண்டன்வல, நிக்கவட்டவான, சிகிரியா, கம்பராவ, டங்கண்டெ ஏராவுல, மவுசகல்ல | 0 15½ | 0 7¾ |
| 6. | எற்றன்வல, கககல, மகலகொட்டுவ, பிற்றவல, பொட்டொற்றுவெல, புவாக்பிட்டிய (ஜி. யு. பி.) கண்டெபிற்றவல | 0 16 | 0 8 |
| 7. | பல்லெகம (எல். பி. பி.) ரம்புக்கொலுவ, இம்டுவ, நாரன்கமுவ (எல். பி. பி.) கல்மினிய (எல். பி. பி.) இயுலவாடிய, வில்கமுவ, கல்கெடவல, அகரகெடிய | 0 16½ | 0 8¼ |

குறிப்பு.—(1) இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட அரிசி அல்லது நெல் விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல. இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அரிசியை அல்லது நெல்லை விற்கலாகாது.

(2) ஒரு நிகர அந்தருக்குக் கூடுதலான அல்லது குறைவான எத்தொகை அரிசியையும் மொத்த விற்பனையாக விற்குமிடத்து அதற்குக் கொடுக்கக்கூடிய அதிகூடின விலையை மேலே சொல்லப்பட்ட ஒரு நிகர அந்தரின் விலையிலிருந்து கவனிக்க வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது